**பிரிவு 348. சாட்சியை வரவழைக்க அல்லது ஆஜரான நபரை விசாரிக்க அதிகாரம் (Power to summon material witness, or examine person present).**

**ஒப்பீடு:** குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 இன் பிரிவு 311 மாற்றமில்லாமல் இந்தச் சட்டத்தில் பிரிவு 348 ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**சாட்சியை விசாரிக்க அதிகாரம்:** எந்தவொரு நீதிமன்றமும், இந்தச் சட்டத்தின் கீழான எந்தவொரு விசாரணையிலும், வழக்கு விசாரணையிலும் அல்லது பிற நடவடிக்கைகளிலும், எந்தவொரு நபரையும்

- சாட்சியாக வரவழைக்கலாம்; அல்லது
- வருகை தந்த எந்தவொரு நபரையும் சாட்சியாக வரவழைக்கவில்லை என்றாலும் விசாரிக்கலாம்; அல்லது
- ஏற்கனவே விசாரித்த எந்தவொரு நபரையும் மறுபடியும் அழைத்து மறு விசாரணை செய்யலாம்.

**இன்றியமையாத சாட்சியம்:** வழக்கின் நியாயமான முடிவுக்கு அவரின் சாட்சியம் இன்றியமையாததாகத் தோன்றினால், நீதிமன்றம் அத்தகைய நபரை வரவழைத்து விசாரிக்க வேண்டும் அல்லது மறுபடியும் அழைத்து மறுவிசாரணை செய்ய வேண்டும்.

இப்பிரிவின் முதல் பகுதியில், சாட்சியை அழைக்கலாம் (may summon) என்று நீதிமன்றத்துக்கு விருப்புரிமை (discretion) கொடுக்கும் சட்டம், இரண்டாவது பகுதியில், வழக்கின் நியாயமான முடிவுக்கு ஒரு நபரின் சான்றுகள் இன்றியமையாததாகத் தோன்றினால், அவரை சாட்சியாக அழைக்க வேண்டும் (shall summon) என்று கட்டாயப்படுத்துகின்றது.

**ஒரு வழக்கறிஞர் மாறிவிட்டார்: அரசுத் தலைமை வழக்குரைஞர் எதிர் சிவ்குமார் யாதவ். (Attorney General Vs Shiv Kumar Yadav, 2015 Cri.L.J. 4640 SC)**

- *பிரிவு 311 இன் கீழ் (இந்தச் சட்டத்தில் பிரிவு 348) கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் நீதி வழங்குவதற்காக மட்டுமே உபயோகப்படுத்த முடியும். ஒரு வழக்கறிஞர் மாறிவிட்டார் என்பதனால் ஒரு சாட்சியை மறுவிசாரணை செய்ய முடியாது.*

**தவறுகளை திருத்துவதற்கு: உச்ச நீதிமன்றம் - ராஜேந்திர பிரசாத் எதிர் போதை மருந்து தடுப்பு பிரிவு. (Rajendra Prasad Vs. The Narcotic Cell, AIR 1999 SC 2292):**

- *நியாயமான தீர்ப்பு எழுதுவதற்காக எந்த நிலையிலும், ஒரு சாட்சியை மறுபடியும் அழைக்கலாம் மற்றும் மறுவிசாரணை செய்யலாம். தவறுதலாக ஒரு முக்கியமான விஷயத்தை வெளிக் கொண்டு வர விட்டுப்போனால், நீதிமன்றம் விசாலமான மனதுடன், அது போல உள்ள தவறுகளை திருத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். ஒரு குற்றவியல் நீதிமன்றத்தின் பணி நீதியை கொடுப்பது. கட்சிகளால் செய்யப்பட்ட பிழைகளை எண்ணுவதோ அல்லது கட்சிகளில் யார் சிறப்பாக செயல்பட்டது என்பதைக் கண்டுபிடித்து அறிவிப்பதோ அல்ல.*

**உச்ச நீதிமன்றம்: ஹரேந்திர ராய் எதிர் பீகார் மாநிலம் (Harendra Rai Vs The State Of Bihar: 2023 INSC 738)**

- *பிரிவு 311 ன் கீழ் (இந்தச் சட்டத்தின் பிரிவு 348) எந்தவொரு விசாரணை, வழக்கு விசாரணை அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள மற்ற*

*நடவடிக்கைகளின் எந்தக் கட்டத்திலும், எந்தவொரு நீதிமன்றத்திற்கும் முக்கிய சாட்சியை வரவழைக்க அல்லது ஆஜரான நபரை விசாரிக்க பரந்த அதிகாரங்களை வழங்குகிறது.*

- *அத்தகைய நபர் சாட்சியாக அழைக்கப்பட்ட நபராக இல்லாமல் இருக்கலாம். திரும்ப அழைப்பதற்கும் மறு விசாரணை செய்வதற்கும் அதிகாரம் உள்ளது. வழக்கின் நியாயமான தீர்ப்புக்கு, அது இன்றியமையாததாக இருக்க வேண்டும்.*
- *சட்டம் மற்றும் நடைமுறையின் பொதுக் கோட்பாடுகளின் கீழ் மேல்முறையீட்டு நீதிமன்றங்கள், நீதியான மற்றும் நியாயமான முடிவை எடுக்கும் முயற்சியில் விசாரணை நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்த முடியும்.*

**பிரிவு 349. ஒருவரை மாதிரி கையெழுத்து அல்லது கையொப்பம் போன்றவை கொடுக்க உத்தரவிட அதிகாரம் (Power of Magistrate to order person to give specimen signatures or handwriting, etc).**

**ஒப்பீடு:** குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 இன் பிரிவு 311-அ சிறு மாற்றத்துடன், இந்தச் சட்டத்தில் பிரிவு 349 ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

- இந்தப் பிரிவின் கீழ் விரல் பதிவுகள் அல்லது குரல் மாதிரி (finger impressions or voice sample) கொடுக்க உத்தரவிட அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.
- நடுவர் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, யாரையும் கைது செய்யாமல், அத்தகைய மாதிரியை வழங்குமாறு உத்தரவிடலாம்.

**மாதிரி கொடுக்க உத்தரவிட**: ஒரு முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர், ஒரு வழக்கின் புலன் விசாரணைக்கு, ஒரு நபரை, குற்றம் சாட்டப்பட்ட நபர் உட்பட, மாதிரி கையெழுத்து அல்லது கையொப்பம் அல்லது விரல் பதிவுகள் அல்லது குரல் மாதிரி (specimen signatures or finger impressions or handwriting or voice sample) கொடுக்க உத்தரவிடுவது வழக்கின் நியாயமான தேவை என்றால், பின்வருமாறு அவர் உத்தரவிடலாம்.

i. ஒரு நபர் நீதிமன்றம் முன்பு, குறிக்கப்பட்ட நேரத்தில், இடத்தில் வர வேண்டும் அல்லது கொண்டு வரப்பட வேண்டும்.
ii. அதன் பின் அவர் மாதிரி கையெழுத்து அல்லது கையொப்பம் அல்லது விரல் பதிவுகள் அல்லது குரல் மாதிரி (specimen signatures or finger impressions or handwriting or voice sample) கொடுக்க வேண்டும்.

இந்தப் பிரிவின் கீழ், அவர் புலன் விசாரணை அல்லது நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே உத்தரவிட முடியும்.

**உச்ச நீதிமன்றம்: சந்தோஷ் @ புரே எதிர் Vs மாநிலம் (ஜி.என்.சி.டி.) டெல்லி (Santosh @ Bhure Vs State (G.N.C.T.) Of Delhi; 2023 7 S.C.R. 719)**

- *மாதிரி கையொப்பங்கள் மற்றும் கையெழுத்தின் மாதிரிகள் சுயமாக குற்றஞ்சாட்டுவதாக (incriminating by themselves) அமையாததினால், புலனாய்வு அதிகாரிகளுக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு பொருளின் கையெழுத்தை அடையாளம் காண அவை பயன்படுத்தப்படுவதனால்,*

*அத்தகைய மாதிரிகளை கட்டாயமாகப் பெறுவது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 20(3) வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுய-குற்றச்சாட்டுக்கு எதிரான விதியை மீறாது.*

**குற்றம் சாட்டுகின்றவருக்கு பொருந்தாது: டாக்டர் சுயோக் எதிர் மகாராஷ்டிரா மாநிலம். (Dr. Suyog Vs. the State of Maharashtra, 2014 Cri LJ (NOC) 444 Bom. 12):** *வழக்குத் தொடுத்தவர், அவரது மாதிரி கையெழுத்தை கொடுக்க வேண்டும் என்று அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டதைக் குறித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது என்னவென்றால், வழக்கு தொடுக்கும் நபர் என்பவர், ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் அல்ல. மேலும், விசாரணை அல்லது சம்பந்தப்பட்ட நடவடிக்கை தொடர்பாக கைது செய்யப்பட்ட நபர் அல்ல. எனவே, பிரிவு 311-அ (இந்தச் சட்டத்தில் பிரிவு 349) விதிகள் பொருந்தாது.*